**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண் 66/2017**

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05–ம் நாள் புதன்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 05.08.2026 | | |
| பெயர்: | கஜேந்திரன் (DW–1 Cross con ) | தகப்பனார் பெயர்: | பெருமாள் |
| கிராமம்: | திருநகரி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாயம் | வயது : | 60/2026 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி : 05.08.2026</u>**

**(ஆரம்பித்த நேரம்–13.52)**

1. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஒப்படைப்பு ஆணை எண்ணும், தேதியும் குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் வெங்கடேசன் பெயர் அடிக்கப்பட்டதால் திரும்ப அனுப்பவும் என்ற மேற்குறிப்பு அதில் இல்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 ஆவணம் நானாக ஏற்படுத்திக்கொண்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

2. பி.வா.சா.ஆ.7 ஆவணம் யார் யாருக்கு எழுதிக்கொடுத்தது என்ற விபரம் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 ஆவணம் கல்யாணி, அன்புமணி, வெள்ளைய தேவன் ஆகியோர் சுப்ரமணியனுக்கு எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான். மேற்படி சுப்ரமணியன் திருநகரியில் வசித்து வந்தார், தற்போது வேலைக்காக திருச்சியில் உள்ளார்.

3. கல்யாணி, அன்புமணி, வெள்ளைய தேவன் ஆகியோரும் திருநகரிதான் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 ஆவண சொத்து திருநகரியில்தான் உள்ளது. பி.வா.சா.ஆ.7 ஆவணம் 06.07.1994ல் ஏற்பட்டது என்றால் சரிதான்.

பி.வா.சா.ஆ.7 ஆவணமானது மோசடியாக முத்திரைத்தாள் வாங்கி ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் ரூ.1,46,250/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் 12.04.1977ல் வாங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் கல்யாணி அம்மாளிடமிருந்து பெறப்பட்டது என்று 17.08.1977 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் ரூ.1,00,000/- முன்பணமாக பெறப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் சுப்ரமணியன் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் அன்புமணி ஆங்கிலத்திலும், பி.வா.சா.ஆ.7ல் தமிழிலும் கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரிதான். நான் போலியான ஆவணங்கள் தயார் செய்து வாதியின் சொத்தை அபகரிக்கும் நோக்கத்துடன் கட்சி நடத்துகிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரியவாறு தீர்ப்பாணை செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.</u>**

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

**(முடிவு நேரம்- 14.11)**